செய்தி வெளியீடு எண்: 971 நாள்:18.12.2020

**<u>இன்று (18.12.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரம், ஏ. வாணியம்பாடியில் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கை திறந்து வைத்து ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்கு பெற்றுள்ள அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கம்.

பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆகிய இருபெரும் தெய்வங்களின் வழியில் நடைபெறுகின்ற அரசு, அம்மாவின் அரசு. பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கடைக்கோடியில் வாழ்கின்ற ஏழை, எளிய மக்களின் வாழ்வு ஏற்றம் பெற வேண்டும், அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் முழுமையாகக் கிடைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய லட்சியம் என்று இந்த இயக்கத்தை உருவாக்கினார். அதில் வெற்றி கண்டார், முதலமைச்சரானார். அவர் வாழ்ந்த காலம் முழுவதும் பொற்காலம். ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதை நிறைவேற்றிக் காட்டிய ஒரே தலைவர் பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். அதே வழியில் வந்த இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், பேரறிஞர் அண்ணா, இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஆகியோர் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்து செயல்படுத்தி, அந்த இருபெரும் தலைவர்கள் கண்ட கனவை நனவாக்குவதற்கு இலட்சயப் பாதையில் நடைபோட்டு, தான் உயிருடன் இருந்தவரை நாட்டு மக்களுக்காக அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றினார்.

அந்த இருபெரும் தலைவர்களுக்கும் வாரிசுகள் கிடையாது. நாம் தான் வாரிசு, மக்கள் தான் வாரிசு. அவ்வாறு எண்ணித்தான் நல்ல பல திட்டங்களை இந்த நாட்டு மக்களுக்குத் தந்தார்கள். ஒரு தாய், தன் குழந்தையின் தேவையை குறிப்பறிந்து செயல்படுவதைப் போல இருபெரும் தலைவர்களும் இந்நாட்டு மக்களை குழந்தைகளாக எண்ணி, அவர்களின் குறிப்பறிந்து, தேவையான திட்டங்களை எப்பொழுது

செயல்படுத்த வேண்டுமென்று எண்ணி, அவைகளை செயல்படுத்தியும் காட்டினார்கள். அவர்கள் செயல்படுத்திய அத்தனை திட்டங்களும் உயிரோட்டமுள்ள திட்டங்கள். வேறு எந்தத் தலைவர்கள் வந்தாலும் அந்தத் திட்டங்களை நிறுத்த முடியாது. சரித்திர சாதனை படைத்த சத்துணவுத் திட்டத்தை தமிழகம் மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும் கடைபிடித்தார்கள். இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆலயங்களில் அன்னதானத் திட்டம் கொண்டு வந்து உணவு கொடுத்தார்கள். பெண்களுக்கான திட்டங்களை குறிப்பறிந்து செயல்படுத்தினார்கள். கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கினார்கள். அம்மா வழியில் நடைபெறும் அரசும் அம்மாவின் வழியை கடைபிடித்து வருகிறது.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நான் முதலமைச்சரானவுடன் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு வரும் ரூபாய் 12 ஆயிரத்தை ரூபாய் 18 ஆயிரமாக உயர்த்தி வழங்குவேன் என்று தேர்தல் நேரத்தில் வாக்குறுதி அளித்ததை நாங்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். பெண்களுக்கான திருமண உதவித் திட்டத்தில், நிதியுதவியாக ரூபாய் 25 ஆயிரம், ரூபாய் 50 ஆயிரம் மற்றும் 4 கிராம் தாலிக்குத் தங்கத்திற்கு பதில் 8 கிராம் (அதாவது 1 பவுன்) வழங்கப்படும் என 2016 தேர்தலில் அம்மா அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். அம்மா அவர்கள் மறைந்தாலும், நான் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், 4 கிராம் தங்கத்தை 8 கிராம் தங்கமாக வழங்கினேன். அதேபோல், திருமண உதவித் தொகையாக ரூபாய் 25 ஆயிரம் மற்றும் ரூபாய் 50 ஆயிரம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டுமென்பதற்காக அம்மாவின் அரசு ஏராளமான திட்டங்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு அம்மாவின் அரசு, தமிழ்நாடு முழுவதும் ஏழை, எளிய மக்களுக்கு மருத்துவ சேவை அளிக்க 2,000 முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் தொடங்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டேன். சேலம் மாவட்டத்தில் 100 இடங்களில் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் தொடங்கப்படும் என்று அறிவித்தேன். முதற்கட்டமாக, கொண்டலாம்பட்டியிலும், இரண்டாவது லத்துவாடியிலும் இன்று, மூன்றாவதாக, பனமரத்துப்பட்டி, ஏ.வாணியம்பாடி பகுதியிலும் திறந்து வைத்துள்ளேன். முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் மூலம் கிராமத்தில் வாழ்கின்ற

மக்கள் அந்தந்தப் பகுதியிலேயே, அவர்களுக்கு காய்ச்சல், தலைவலி மற்றும் சிறிய நோய்கள் ஏற்பட்டால் உடனடியாக அம்மா மினி கிளினிக்கை நாடி தங்களுடைய நோயை குணப்படுத்திக் கொள்ளலாம். கடுமையான நோய் மற்றும் அறுவை சிகிச்சை போன்றவற்றிற்கு தங்கள் பகுதியிலுள்ள மினி கிளினிக் மருத்துவரை நாடினால், அவர் பரிசோதனை மேற்கொண்டு, மேல் சிகிச்சைக்காக சேலம் தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி, அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படும். இவ்வாறு ஏழை, எளிய மக்களுக்காக திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துகிற ஒரே அரசு, அம்மாவின் அரசு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள், வீரபாண்டி, பனமரத்துப்பட்டி, இளம்பிள்ளை ஆகிய பகுதிகளில் இருக்கின்ற மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட காவேரித் தண்ணீர் வழங்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக தொடர்ந்து வைத்து வந்த கோரிக்கையை அம்மாவின் அரசு விரைவில் நிறைவேற்றி, அந்தப் பகுதிகளிலுள்ள **4,63,500** மக்கள் நிரந்தரக் குடிநீர் பெறுவதற்கான வழிவகைகளை அம்மாவின் அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலத்திலிருந்து கோயம்புத்தூர் செல்கின்ற தேசிய நெடுஞ்சாலை அரியானூர் பெரிய ரோட்டில், அரியானூர் பகுதியில் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. கிராமத்திலிருந்து வருகின்றவர்கள் அந்தப் பாதையை கடக்கும்போது விபத்துக்குள்ளாகி உயிரிழக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அங்கே ஒரு மேம்பாலம் கட்ட வேண்டுமென்று மக்களிடத்திலிருந்தும், சட்டப்பேரவை உறுப்பினரிடத்திலிருந்தும் கோரிக்கை வந்தது, அந்தக் கோரிக்கையையும் நாங்கள் தான் நிறைவேற்றித் தந்திருக்கிறோம். சுமார் ரூபாய் **45** கோடி மதிப்பீட்டில் அப்பணி நிறைவு பெறும் தருவாயில் இருக்கின்றது, நிறைவு பெற்றவுடன் நானே நேரில் வந்து அந்தப் பாலத்தையும் துவக்கி வைப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல பல்வேறு சாலைப் பணிகளை சிறப்பாக செயல்படுத்தியிருக்கின்றோம். என்றைக்கும் இல்லாத அளவிற்கு நகர்ப்புற சாலையிலிருந்து கிராமப்புற சாலை வரை மற்றும் நெடுஞ்சாலை பராமரிக்கப்படுகின்ற சாலை போன்ற பெரும்பாலான சாலைகளை சீர்செய்து தரமான சாலையாக எங்களுடைய அரசு மக்களுக்கு வழங்கியிருக்கிறது. அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரை, மக்களுடைய அரசு, மக்கள் என்ன

எண்ணுகின்றார்களோ அதை நிறைவேற்றுகின்ற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் அவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கின்றார். அவர் வீடியோ கான்ப்ரன்ஸ்–ல் கட்சியினரிடம் பேசிக் கொண்டிருக்கிறார். நாங்கள் நேரடியாக மக்களை சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். கொரோனா வைரஸ் தொற்று எளிதாக மற்றவருக்கு எளிதாக பரவக்கூடிய ஒரு கடுமையான நோய். இப்படிப்பட்ட சூழ்நிலையிலும், தமிழ்நாடு முழுவதும் ஒரு மாவட்டத்தைத் தவிர்த்து, அனைத்து மாவட்டங்களிலும் நேரடியாகச் சென்று ஒவ்வொரு மாவட்டத்திலும் கொரோனா வைரஸ் தொற்று நோய் எந்த அளவுக்கு கட்டுப்படுத்துவதற்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள், மாண்புமிகு அம்மாவின் அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்களை எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நேரடியாகச் சென்று ஆய்வு செய்த ஒரே முதலமைச்சர் தமிழ்நாட்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக முதலமைச்சர், மறுக்க முடியுமா ? நீங்கள் வீட்டிலே அமர்ந்து வீடியோ கான்ப்ரன்ஸ் மூலமாக அரசை விமர்சிக்கின்றீர்கள், அமைச்சர்களை விமர்சிக்கின்றீர்கள், கட்சியை விமர்சிக்கின்றீர்கள். மக்களை சந்திப்பது பெரிதா ? வீட்டிலே இருந்து பேசுவது பெரிதா ? என்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள்.

நாங்கள் மக்களுக்காக கடுமையாக உழைக்கின்றோம். நேரடியாக மக்களை சந்திக்கின்றபோதுதான் அங்கே என்னென்ன பிரச்சனைகள் உள்ளது என்பதை உணர முடியும். அப்படி உணர்ந்தால்தான் அதை நிறைவேற்ற முடியும். அதை எங்களுடைய அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. நான் மட்டுமல்ல, மேடையில் அமர்ந்திருக்கின்ற சட்டப்பேரவை உறுப்பினர்கள் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், கழகத்தினுடைய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சித் துறையின் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், கூட்டுறவு சங்கத்தின் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், நிர்வாகிகள் அனைவரும் மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறோம், இரவு, பகல் பாராமல் உழைக்கின்றோம். இருபெரும் தலைவர்கள் வழியிலே உழைத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே,

ஒவ்வொரு துறையிலும் என்னென்ன நன்மைகள் மக்களுக்கு கிடைக்குமோ அவை கிடைக்க வேண்டுமென்பதற்காக நாங்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் அப்படியா இருக்கின்றது ? சுயநலவாதிகள். தங்கள் குடும்பம்தான் வாழ வேண்டுமென்று எண்ணுகின்ற ஒரே கட்சி திராவிட முன்னேற்றக் கழக கட்சிதான். அந்தக் கட்சியில் தலைவரிலிருந்து தொண்டர்கள் வரைக்கும் அப்படித்தான் இருக்கிறார்கள். ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் அப்படியல்ல, உழைக்கின்றவர்கள் பதவிக்கு வர முடியும். விசுவாசமாக இருக்கின்றவர்கள் உயர்ந்த நிலைக்கு வர முடியும். ஏனென்று சொன்னால், உழைக்கின்றவர்களைத்தான் மக்கள் மதிப்பார்கள். அதை மதிக்கக்கூடிய கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. ஆகவே தான், இந்த இயக்கத்தை உடைக்க முயற்சித்தார்கள், இந்த அரசைக் கலைக்க முயற்சித்தார்கள், மக்களுடைய துணை கொண்டு இரண்டும் முறியடிக்கப்பட்டது. ஆகவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்றைக்கும் மக்களுக்காக தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, கிராமப்புற மக்களுடைய வாழ்வு உயர எங்களுடைய அரசு அர்ப்பணிப்பு உணர்வோடு பாடுபடும்.

இந்த விழாவில் கலந்து கொண்ட அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து, இந்நிகழ்ச்சியை சீரும், சிறப்போடும் நடத்துவதற்கு துணை நின்ற அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

--------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**